**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 49/2025 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-1 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திரு.ஜோஸ்ராஜாமான்சிங் (தலைமைக்காவலர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர்

09.06.2026.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2024 ம் தேதி மாலை 16.30 மணிக்கு ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஹரிராம் அவர்களுக்கு உதவியாக நானும், தலைமைக்காவலர் (HC-200) திரு.சங்கர்கணேஷ் ஆகியோர்கள் மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்மந்தமாக பழைய ஏழாயிரம்பண்ணையில் ரோந்து பணியில் ஈடுபட்ட போது பழைய ஏழாயிரம்பண்ணை ஏமராஜ் கோவில் அருகே வைத்து ரோந்துமேற்கொண்டபோது ஓ.முத்துசாமிபுரம் தெற்கு தெருவினை சேர்ந்த கந்தசாமி மகன் முனியசாமி என்பவர் அரசு எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் அரசு முத்திரையோடு கூடிய 650 ML அளவு கொண்ட SNJ 10000 delux super strong beer bottle - 5 எண்ணம், 180 ML அளவு கொண்ட One man army XXX Rum Bottle- 5 எண்ணம் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்காக வைத்திருந்த நபரை கைது செய்து மேற்படிசொத்துக்களுக்கு அத்தாட்சி தயார் செய்தோம். மேற்படி அத்தாட்சியில்

தனிநபர் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் நானும், தலைமை காவலர் திரு.சங்கர்கணேஷ் ஆகிய இருவரும் கையொப்பம் செய்தோம். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களோடு நிலையம் வந்து சொத்துக்களையும் காவல் நிலையத்தில் கொண்டு சென்று வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சிகையொப்பம் என்னுடையதுதான். அத்தாட்சியானது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது வழக்கு சொத்துக்கள் அடங்கிய புகைப்படம் தான் மேற்படி புகைப்படமானது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாகசார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–</u>**

தமிழ்நாடு மதுபான நுகர்வோர் விதிகளின் படி ஒரு நபர் 4 ½ லிட்டர் வரையில் மதுபானங்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற அரசாணை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் ஒரு நபர் 7.8 லிட்டர் வரையில் பீர் பாட்டில்கள் வைத்துக்கொள்ளலம் என்ற விதி குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் அத்தாட்சியானது பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதென்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.